**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**IM00 இகரம் (Ikaram)**

**இணையவழித் தேர்வு (Online Exam)**

# வினாத்தாள் அமைப்பு

**நேரம் : 30 மணித்துளிகள்** **மதிப்பெண்கள்: 25**

## பகுதி – அ
## மொழியோடு விளையாடுதல்

❖ மொழியோடு விளையாடுவோம் பகுதியிலிருந்து ஏதேனும் ஒரு பகுதியை அடிப்படையாகக் கொண்டு ஐந்து வினாக்கள் அமைக்கப்படும்.

(5x1 = 5 மதிப்பெண்கள்)

## பகுதி – ஆ
## பொருத்துதல்

❖ பாடம் 2, 22 (மரபுத்தொடர்), 3 (திணை), 5 (பால்), 7 (ஒருமை, பன்மை), 4, 24 (இணைமொழிகள்), 8, 26 (எண்ணுப்பெயர்கள்), 20 (உவமைத்தொடர்கள்), 25 (இரட்டைக்கிளவி/ அடுக்குத்தொடர்), 28 (நிறுத்தக்குறிகள்) ஆகிய பாடங்களின் இலக்கணப்பகுதியிலிருந்து ஏதேனும் ஒரு பாடத்தினை அடிப்படையாகக் கொண்டு பொருத்துக வடிவில் வினா அமைக்கப்படும். (5x1 = 5 மதிப்பெண்கள்)

❖ அறிந்து கொள்வோம், பொருள் அறிவோம் பகுதியிலிருந்து ஐந்து வினாக்கள் – பொருத்துக வடிவில் வினா அமைக்கப்படும். (5x1 = 5 மதிப்பெண்கள்)

## பகுதி – இ
## கோடிட்ட இடத்தை நிரப்புதல்

❖ படிப்போம் பகுதியில் ஏதேனும் ஐந்து பாடங்களிலிருந்து ஒரு பாடத்திற்கு ஒரு வினா வீதம் ஐந்து வினாக்களைக் கோடிட்ட இடத்தை நிரப்புக வடிவில் வினா அமைக்கப்படும்.

(5x1 = 5 மதிப்பெண்கள்)

## பகுதி – ஈ
## சரியா / தவறா எனக் குறியிடல்

❖ அனைத்துப் பாடப்பகுதியிலிருந்து ஐந்து வினாக்கள் சரியா தவறா எனத் தேர்வு செய்யுமாறு வினா அமைக்கப்படும். (5x1 = 5 மதிப்பெண்கள்)

*****

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**IM00 இகரம் (Ikaram)**

**எழுத்துத் தேர்வு (Written Exam)**

**வினாத்தாள் அமைப்பு**

**நேரம் : 2.00 மணி நேரம்** **மதிப்பெண்கள்: 75**

**பகுதி – அ**
**படித்தல் திறன்**

- கேட்டல் கருத்தறிதல், பகுதியிலிருந்து கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக என்ற தலைப்பில் ஏதேனும் ஒரு உரைப்பகுதி கொடுக்கப்படும். (5x1 = 5 மதிப்பெண்கள்)

- பாடப்பகுதியிலுள்ள கருத்து விளக்கப்படம் பகுதியிலிருந்து ஏதேனும் ஒரு பகுதியை அடிப்படையாகக்கொண்டு ஐந்து வினா அமைக்கப்படும். (5x1 = 5 மதிப்பெண்கள்)

**பகுதி – ஆ**
**படிப்போம் பகுதி**

- பாடப்புத்தகத்தில் உள்ள அனைத்துப் படிப்போம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்கள் அமைக்கப்படும்.

  - சரியா? தவறா? 5 வினாக்கள். (5x1 = 5 மதிப்பெண்கள்)

  - கோடிட்ட இடம், சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. ஐந்து வினாக்கள். (5x1 = 5 மதிப்பெண்கள்)
  - கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையை எடுத்து எழுதுக. (5x2 = 10 மதிப்பெண்கள்)

**பகுதி – இ**
**இலக்கணப் பகுதி**

- பாடப்புத்தகத்தில் உள்ள இலக்கணப் பகுதியிலிருந்து இரண்டு வினாக்கள் அமைக்கப்படும்.

  - பாடம் 1 (இடைச்சொற்கள்), 2, 22 (மரபுத்தொடர்கள்), பாடம் 3 (திணை), 4, 24 (இணைமொழிகள்), 5 (பால்). 6, 10, 12 (ஒலி வேறுபாடு), 7 (ஒருமை, பன்மை). 13 (வினாச்சொற்கள்), 8, 26 (எண்ணுப்பெயர்கள்), 20 (உவமைத்தொடர்கள்), 25 (இரட்டைக்கிளவி/ அடுக்குத்தொடர்), ஆகிய பாடங்களிலிருந்து ஏதேனும் ஐந்து வினாக்கள் அமைக்கப்படும். (5x2 = 10 மதிப்பெண்கள்)

- பாடம் 9 (பெயரெச்சம்/ வினையெச்சம்). 11 (பெயரடை/வினையடை), 17, 19 (வேற்றுமை), 18 (மரபு) 21 (ஒரு சொல் பல பொருள்), 23 (பல சொல் ஒரு பொருள்), 14, 27, 30 (தொடரமைப்பு), 28 (நிறுத்தக்குறிகள்), 29 (செய்வினை/செயப்பாட்டுவினைத் தொடர்கள்) ஆகிய பாடங்களிலிருந்து ஏதேனும் ஐந்து வினாக்கள் அமைக்கப்படும். (5x2 = 10 மதிப்பெண்கள்)

**பகுதி – ஈ**
**செய்யுள் பகுதி**

- செந்தமிழ்ச்செல்வம் பகுதியிலுள்ள திருக்குறள் பகுதியிலிருந்து ஒரு வினா அமைக்கப்படும்.

  - செந்தமிழ்ச்செல்வம் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள திருக்குறளில் ஏதேனும் ஐந்து திருக்குறள்களை எடுத்து அதன் ஒரு சொல்லை மட்டும் நீக்கி, நிறைவு செய்க என்ற அடிப்படையில் வினாக்கள் அமைக்கப்படும்.
(5x2 = 10 மதிப்பெண்கள்)

**பகுதி – உ**
**மொழிபெயர்ப்போம் பகுதி**

- மொழிபெயர்ப்போம் பகுதியிலிருந்து ஒரு வினா அமைக்கப்படும்.

  - அனைத்துப் பாடங்களிலும் உள்ள அறிந்துகொள்வோம் பகுதியிலிருந்து ஒரு வினா அமைக்கப்படும். (5 x 1 = 5 மதிப்பெண்கள்)

**பகுதி – ஊ**
**படைப்பாற்றல் திறன்**

- படைப்பாற்றல் வளர்ப்போம் பகுதியை அடிப்படையாகக் கொண்டு ஒரு வினா அமைக்கப்படும். (1 x10 = 10 மதிப்பெண்கள்)

  - தொடர்களை வரிசை மாற்றி அமைத்துக் கதை உருவாக்குதல் அடிப்படையில் அமைக்கப்படும்.
  - படம் பார்த்துக் கதை/ தொடர் எழுதுதல் அடிப்படையில் அமைக்கப்படும்.
  - பாதிக் கதையைக் கொடுத்து மீதிக் கதையைத் தொடர்ந்து எழுதுதல் அடிப்படையில் அமைக்கப்படும்.

*****